# தமிழ்



TERM 1



## படம் பார்த்து பெயர் சொல்லுக :

### உயிர் எழுத்துகள்


அ


ஆ


இ


ஈ


உ


ஊ


எ


ஏ


ஐ


ஒ


ஓ


ஔ

### ஆய்த எழுத்து


ஃ

## பயிற்சி :

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துகளின் ஒலியை அறிக:

அ



அம்மா

ஆ



ஆடு

இ



இளநீர்

ஈ



ஈட்டி

உ



உடும்பு

ஊ



ஊஞ்சல்

# பயிற்சி : எழுதிப் பழகுக

சொல்லிச் சொல்லி எழுதுக:

அ ஆ இ

ஈ உ ஊ

## பயிற்சி :

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துகளின் ஒலியை அறிக:

எ



எலி

ஏ



ஏற்றம்

ஐ




ஐந்து

ஒ



ஒட்டகம்

ஓ



ஓநாய்

ஔ



ஔடதம்

## பயிற்சி : எழுதிப் பழகுக

சொல்லிச் சொல்லி எழுதுக:

எ ஏ ஐ

ஒ ஓ ஔ



அடுப்புக் கூட்டம் போல
அடுக்காய் இருக்கும் புள்ளி
துடுக்காய் மூன்று போட்டால்
தூய ஆய்தம் ஆகும்.

## பயிற்சி :

படத்தின் பெயரைக் கூறுக:









அ முதல் ஔ வரை எழுதுக :

## பயிற்சி :

படத்துடன் பொருத்துக :

ஈ

ஔ

ஏ

ஓ









படத்தின் முதல் எழுத்தை எழுதுக:










# மெய் எழுத்துகள் :

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துகளின் ஒலியை அறிக:

## க்



சக்கரம்



கொக்கு



பாக்கு

## ங்



குரங்கு



சிங்கம்



நுங்கு

# மெய் எழுத்துகள் :

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துகளின் ஒலியை அறிக:

ச்



மொச்சை



தச்சர்



எலுமிச்சை

ஞ்



இஞ்சி



ஊஞ்சல்



மஞ்சள்

## சொல்லிச் சொல்லி எழுதுக:

க் முதல் ஞ் வரை எழுதுக:

க் ங் ச் ஞ்

## மெய் எழுத்துகள் :

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துகளின் ஒலியை அறிக:

# ட்



கட்டில்



வட்டம்



தட்டு

# ண்



கண்



நண்டு



வண்டு

## மெய் எழுத்துகள் :

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துகளின் ஒலியை அறிக:

# த்



வாத்து



நத்தை



மத்தளம்

# ந்



பருந்து



பந்து



தந்தம்

## சொல்லிச் சொல்லி எழுதுக:

ட் முதல் ந் வரை எழுதுக:

ட் ண் த் ந்

## சொல்லிச் சொல்லி எழுதுக:

க் முதல் ந் வரை எழுதுக:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

சொற்களில் உள்ள மெய் எழுத்துகளை வட்டமிடுக:

| | | |
|---|---|---|
| சட்டை | நுங்கு | கத்தி |
| சக்கரை | வண்டு | நந்தி |
| பஞ்சு | பட்டு | பச்சடி |
| பச்சை | கண் | தக்காளி |

## படம் பார்த்து பெயர் சொல்லுக :

| | | |
|---|---|---|
| <br>க் | <br>ங் | <br>ச் |
| <br>ஞ் | <br>ட் | <br>ண் |
| <br>த் | <br>ந் | <br>ப் |

## சுவைகள்:

கரும்பு இனிக்கும்.



எலுமிச்சை புளிக்கும்.



பாக்கு துவர்க்கும்.



மிளகாய் கார்க்கும்.



உப்பு உவர்க்கும்.



பாகற்காய் கசக்கும்.



## நிறங்கள்:

பால் வெண்மை நிறம்.



காகம் கருப்பு நிறம்.



கிளி பச்சை நிறம்.



தக்காளிப்பழம் சிவப்பு நிறம்.



எலுமிச்சம் பழம் மஞ்சள் நிறம்.



நாவல் பழம் ஊதா நிறம்.



வானம் நீல நிறம்.



# மொழிப்பயிற்சி:

## மரங்கள்


மா மரம்


ஆலமரம்


வாழை மரம்


வேப்ப மரம்


பனை மரம்


தென்னை மரம்

## பூக்கள்


தாமரைப் பூ


தாழம் பூ


ரோஜாப் பூ


மல்லிகைப்பூ


செவ்வந்திப் பூ


வாழைப் பூ

## செயல்கள்:



அதிகாலையில் எழு.



பல்துலக்கு, குளி.



இறைவனை வணங்கு.



சாப்பிடு.



பள்ளிக்குச் செல்.



மாலையில் விளையாடு.



பாடங்களைப்படி.



நன்றாக உறங்கு.

## உடல் உறுப்புகளின் பயன்கள்:



நாம் கண்களால் பார்க்கிறோம்.



நாம் காதுகளால் கேட்கிறோம்.



நாம் மூக்கால் நுகர்கிறோம்.



நாம் பற்களால் மெல்லுகிறோம்.



நாம் நாவால் சுவைக்கிறோம்.



நாம் வாயால் பேசுகிறோம்.



நாம் கைகளால் வேலை செய்கிறோம்.



நாம் கால்களால் நடக்கிறோம்.

# மொழிப்பயிற்சி:

## பசு

பசு சாதுவான மிருகம்.
பசு புல்லைத் தின்னும்.
பசு பால் தரும்.
பாலில் இருந்து தயிர்,
வெண்ணெய், நெய் கிடைக்கிறது.
பால் ஒரு சத்தான உணவு.





## எங்கள் பள்ளி

இது நான் படிக்கும் பள்ளி.
எங்கள் பள்ளியின் பெயர் ______________________________.
இது ஒரு மேல்நிலைப்பள்ளி.
இங்கு படிக்க நூலகம் உண்டு.
சோதனைக் கூடங்கள் உண்டு.
கணினிக் கூடங்கள் உண்டு.
விளையாடுவதற்கு விளையாட்டு மைதானம் உண்டு.
பள்ளியின் தலைமை நிர்வாகி முதல்வர் என்று அழைக்கப்படுகிறார்.
ஒவ்வொரு வகுப்பிற்கும் வகுப்பு ஆசிரியர் உண்டு.
நான் பள்ளியில் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

## பாட்டு:

### கடவுள் வாழ்த்து



எங்கும் இருக்கும் ஆண்டவனே!
எம்மைக் காக்கும் இறைவனே!
அம்மா அப்பா ஆனவனே!
அன்பு உள்ளம் கொண்டவனே!
நன்றாய் உலகில் நான்வாழ,
நல்ல கல்வி தந்திடுவாய்.





## பாட்டு:



### குள்ள குள்ள வாத்து

குள்ள குள்ள வாத்து,
குவா குவா வாத்து,
மெல்ல உடலை சாய்த்து,
மேலும் கீழும் பார்த்து,
மெல்லமாக நடக்கும்,
சின்ன மணி வாத்து.

## பாட்டு:





### சின்னச் சின்ன கடிகாரம்

சின்னச் சின்ன கடிகாரம்!
சிறப்பு மிக்க கடிகாரம்!
என்றும் எங்கும் நேரத்தை,
எடுத்துக் காட்டும் கடிகாரம்!
அண்ணன் தம்பி போலங்கே,
அழகு முட்கள் இரண்டுண்டு!
ஒன்றன் பின்னே ஒன்றாக,
ஓடிச் சுற்றி மணிகாட்டும்.

## பாட்டு:

### சின்ன விஜயராணி

சின்ன விஜயராணி! செல்ல விஜயராணி!
வட்டமிட்டு சுற்றுகிறாள்! வடைக்காக பாடுகிறாள்!
குதித்து குதித்து தின்னுகிறாள், கூவிக் கூவி பாடுகிறாள்!
மிளகாய்த் துண்டு சிறு துண்டு, கடித்தாளாம் நறுக்கென்று
துடித்துத் துடித்துக் கத்துகிறாள்!
தேம்பி தேம்பி அழுகிறாள்.



## பாட்டு:



### நமது இந்தியா

நமது நாடு, நமது நாடு
என்று சொல்லுவோம்!
நானும் நீயும் ஒன்றாயிருந்து
நட்புக் கொள்ளுவோம்!
இமயம் முதல் குமரி வரை
உறவு தேடுவோம்!
இந்தியாவே நமது என்று
சிந்து பாடுவோம்.



# கதைப்பாட்டு:

## இரண்டு ஆடுகள்



ஆடு இரண்டு வந்ததாம்,
பாலம் கடக்க முனைந்ததாம்,
இரண்டும் திரும்ப மறுக்கவே,
ஒன்றாய்க் கடக்கத் துணிந்ததாம்.
ஒன்று படுத்துக் கொண்டதாம்,
ஒன்று தாண்டிச் சென்றதாம்!
இரண்டும் ஒரே நேரத்தில்
பாலம் கடந்து முடிந்ததாம்.

**நீதி: மனம் இருந்தால் மார்க்கமுண்டு.**

## விறகு வெட்டி

விறகு வெட்டியின் கோடாரி,
குளத்தினுள்ளே விழுந்தது,
அங்கு வந்த தேவதை,
தங்கக் கோடாரி தந்தது;
தங்கம் வெள்ளி இல்லை என்று,
விறகு வெட்டி சொன்னதும்;
தங்கம், வெள்ளி, இரும்புக் கோடாரி,
தந்தேன் உனக்கே என்றது.

**நீதி: உண்மை நன்மை பயக்கும்.**



தமிழ்

## பூனையும் அப்பமும்:



ஒருநாள் இரண்டு பூனைகள் டாமியும் செர்ரியும் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தன. அப்போது வீட்டின் உள்ளிருந்து ஜன்னல் வழியே ஒரு பெரிய அப்பம் அவர்கள் முன் வந்து விழுந்தது. டாமியும் செர்ரியும் மிகுந்த மகிழ்ச்சியுடன் அப்பத்தை எடுத்தன. செர்ரியும், டாமியும் அப்பத்தை சமபாகமாக பகிர்ந்து கொள்ள முயற்சித்தன. ஆனால் அப்பத்தை பிரிக்கும் பொழுது அது சமமாக இல்லை. எனவே இரண்டும் சண்டையில் இறங்கியது. அவ்வழியே வந்த குரங்கிடம் நியாயம் கேட்டது. குரங்கும் அப்பத்தை சமமாக பிரிக்க மகிழ்வுடன் இசைந்தது. இரண்டு பகுதியில் பெரிய அப்பத்தை ஒரு கடி கடித்தது. ஆனால் இன்னொரு பகுதி பெரியதாக தெரிந்தது. எனவே அதையும் ஒரு கடி கடித்தது. இப்படியாக மாறி மாறி கடித்ததால் அப்பம் இரு சிறு துண்டுகளானது. அவைகளையும் கடைசியாக குரங்கே தின்று தீர்த்துவிட்டது. தங்களுக்கு அப்பம் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த பூனைகள் இரண்டும் ஏமாந்து போனது.

**கருத்து:** தகுதியற்ற நபரிடம் நியாயம் கேட்டுச் செல்லாதே

**நீதி:** ஒன்றுபட்டால் உண்டு நன்மை.



# தமிழ்

TERM 2



## தமிழ்

### மெய் எழுத்துக்கள்

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துக்களின் ஒலியை அறிக:

# ப்



கப்பல்



சப்பரம்



பப்பாளி

# ம்



பம்பரம்



ஆலமரம்



பாம்பு

## மெய் எழுத்துக்கள்

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துக்களின் ஒலியை அறிக:

# ய்



கொய்யா



பாய்



நாய்

# ர்



ஏர்



இளநீர்



வேர்

## சொல்லிச் சொல்லி எழுதுக:



ப் முதல் ர் வரை எழுதுக:

ப் ம் ய் ர்

## மெய் எழுத்துக்கள்

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துக்களின் ஒலியை அறிக:

# ல்



சேவல்



நெல்



பல்லி

# வ்



கொவ்வை



செவ்வந்தி



செவ்வாழை

## மெய் எழுத்துக்கள்

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துக்களின் ஒலியை அறிக:

# ழ்



யாழ்



சிமிழ்



தாழ்பாள்

# ள்






வாள்



தேள்

## மெய் எழுத்துக்கள்



படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துக்களின் ஒலியை அறிக:

# ற்



காற்றாடி



புற்று



பற்கள்

# ன்



மீன்



மான்



காளான்

## சொல்லிச் சொல்லி எழுதுக:

ல் முதல் ன் வரை எழுதுக:

ல் வ் ழ் ள் ற் ன்

## சொல்லிச் சொல்லி எழுதுக:

ப் முதல் ன் வரை எழுதுக:

| | | | | |
|---|---|---|---|---|
| ப் | ம் | ய் | ர் | ல் |
| | | | | |
| | | | | |
| | | | | |
| வ் | ழ் | ள் | ற் | ன் |
| | | | | |
| | | | | |
| | | | | |

## தமிழ்

**சொற்களில் உள்ள மெய் எழுத்துக்களை வட்டமிடுக:**

| | | |
|---|---|---|
| கப்பல் | பல்லி | வாள் |
| இளநீர் | யாழ் | மான் |
| செவ்வந்தி | மீன் | சிமிழ் |
| புற்று | தேள் | சேவல் |
| பம்பரம் | முயல் | கொவ்வை |

**படத்தைப் பார்த்து விடுபட்ட எழுத்தை எழுதுக:**



க __ ப __



சேவ __



மர __



யா __



பு __ று



வா __ கோழி



நா __



ஏ __

# தமிழ்

## பூச்சிகள்:



ஈ



வண்டு



பட்டாம்பூச்சி



எறும்பு



குளவி



சிலந்தி



தட்டான்பூச்சி



கொசு



தேனீ





கரப்பான்பூச்சி



வெட்டுக்கிளி

# தமிழ்

## தாயும் சேயும்:



நாய்க்குட்டி



பூனைக்குட்டி



யானைக்குட்டி



பசுங்கன்று



ஆட்டுக்குட்டி



கோழிக்குஞ்சு

## தாயும் சேயையும் பொருத்துக:



## விளையாட்டு:



மேசைவலைப்பந்தாட்டம்



ஆடுபலகை



கைப்பந்தாட்டம்



கிரிக்கெட்



பூப்பந்தாட்டம்



வலைப்பந்தாட்டம்



மட்டைப்பந்தாட்டம்



கால்பந்தாட்டம்

## எதிர்ப்பதம்:



உயரமான மரம்.



குட்டையான மரம்.



உயரமான வாள்.



குட்டையான கத்தி.



உயரமான
ஒட்டகம்.



குட்டையான
நாய்.

உயரமான பேருந்து.





குட்டையான மகிழுந்து.



உயரமான பேனா



குட்டையான பென்சில்



உயரமான பெண்



குட்டையான பையன்

## ஒலிகள்:

படங்களுடன் சேர்த்துப்படி:



காள், காள் என்று கத்தும்



பிளிறும்



கா, கா என்று கரையும்



லொள், லொள் என்று குரைக்கும்



அகவும்



கர்ச்சிக்கும் / முழங்கும்



ஊளையிடும்

# தமிழ்

## அடுக்குத்தொடர்:



கந்தன் கல கல வென்று சிரித்தான்.

நளன் நடு நடுங்கி நின்றான்.

நான் வெட வெடத்துப் போனேன்.

மணி கண கண வென்று ஒலித்தது.

மாலா மட மட வென குடித்தாள்.

பட்டாசு பட பட வென்று வெடித்தது.



பறவைகள் கூட்டங்கூட்டமாய்ப் பறக்கும்

வாழைக்காய் சீப்பு சீப்பாய்க் காய்க்கும்.

திராட்சை குலைகுலையாய்க் காய்க்கும்.

பூக்கள் கொத்துக்கொத்தாய்ப் பூக்கும்.

எறும்புகள் சாரைசாரையாய்ச் செல்லும்.

மாடுகள் மந்தை மந்தையாய் மேயும்.

கற்கள் குவியல் குவியலாய்க் கிடக்கும்.







# தொழில்கள் பலவிதம்



கொத்தனார்
வீடு கட்டுகிறார்.



சிற்பி
சிற்பம் செதுக்குகிறார்.



தச்சர்
நாற்காலி செய்கிறார்.



உழவர்
விதை விதைக்கிறார்.



ஓட்டுனர்
பேருந்து ஓட்டுகிறார்.



தபால்காரர்
தபால் கொடுக்கிறார்.



கருமார்
இரும்பு அடிக்கிறார்.



வண்ணார்
துணி துவைக்கிறார்.

## ஒருமை - பன்மை



பூ



நான்கு பூக்கள்



பூனை



மூன்று பூனைகள்



பந்து



இரண்டு பந்துகள்



நரி



ஐந்து நரிகள்



பறவை



ஏழு பறவைகள்

## குறில், நெடில், வடிவங்கள், ஐம்பால்

| | |
|---|---|
| குறில் | அ இ உ எ ஒ |
| நெடில் | ஆ ஈ ஊ ஏ ஓ ஔ |
| வல்லினம் | க ச ட த ப ற |
| மெல்லினம் | ங ஞ ண ந ம ண |
| இடையினம் | ய ர ல வ ள ழ |
| வடமொழி எழுத்துகள் | ஜ ஸ ஷ ஹ் க்ஷ |

| | |
|---|---|
| வட்டம் |  |
| செவ்வகம் |  |
| சதுரம் |  |
| முக்கோணம் |  |
| அறுகோணம் |  |
| உருளை |  |
| கூம்பு |  |

ஆண்பால் ............... குமார் ஓடுகிறான் ...............





பெண்பால் ............... பிரியா நிற்கிறாள் ...............



பலர்பால் ............... ராஜாவும், உமாவும் நிற்கிறாள் ...............

ஒன்றன்பால் ...............  பறவை பறக்கின்றது ...............



பலவின்பால் ............... பறவைகள் பறக்கின்றன ...............

# தமிழ்

## ஓர் எழுத்துச் சொற்கள்



ஆ, தீ, கோ, நீ, மா, ஈ, வா, தா,
மை, கை, பை, வை, தை, போ.

## இரண்டு எழுத்துச் சொற்கள்



ஆடு, ஆண், ஆடை, ஆமை,
உளி, உமி, ஊர், ஊமை, ஊசி, எலி,
என், ஏணி, ஏழு, ஏரி, ஒலி, ஒளி,
ஓடை, ஓடு, பசு, படி, நடி, நரி, தடி,
நட, புலி, வேலி, கண், உன், எண்,
பெண், பாடு, கோடு, காடு, மாடு, மான்,
நாடு, வீடு, எடு, கேணி, பணி, மணி,
மாலை, கீரை, இமை, போர், மோர்,
நோய், தோடு, கடை.

## மூன்று எழுத்துச் சொற்கள்



அப்பா, அம்மா, அணில், அம்மி,
அம்பு, அவல், அரம், ஆவல்,
ஆந்தை, இஞ்சி, இதழ், ஈசல்,
ஈசன், உரல், உப்பு, உடல், ஊதல்,
ஊர்தி, ஊனம், எருது, எட்டு, எஃகு,
ஐந்து, ஐவர், ஐயம், ஒன்று, ஓநாய்,
ஓடம், சங்கு, தராசு, நான்கு, மரம்,
வயல், நன்றி, பலன்.

## சிறப்பு எழுத்துக்கள்

ந



நத்தை

ண



கிணறு

ன



பூனை

ர



பம்பரம்

ற



புறா

ழ



யாழ்

ள



மிளகாய்

ல



லட்டு

## பாட்டு:



### ஆட்டுக்குட்டி

ஐப்பசி மாதம் வந்தது
அடை மழையும் பெய்யுது
ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி
வீட்டுக்குள்ளே ஓடி வா
சும்மா நீயும் மழையிலே
துள்ளித் துள்ளி ஓடாதே
அம்மா கண்டால் வைவாளே?
ஆமா நீயும் உள்ளே வா.

### இறைவன் சுட்ட அப்பம்

அரிசி மாவும் உளுந்து மாவும்
அரைத்துச் சுட்ட அப்பம்
அம்மா சுட்ட அப்பம்
அப்பம் மொத்தம் பத்து
இறைவன் சுட்ட அப்பம்
எண்ணிக்கையில் இரண்டு
பெரிய அப்பம் சூரியன்
சிறிய அப்பம் சந்திரன்
சூரிய அப்பம் வெப்பம்
சந்திர அப்பம் தெப்பம்



## பாட்டு:

# இரயில் வண்டி

குப்குப் குப்குப் ரயில் வண்டி
கூவிச் செல்லும் ரயில் வண்டி
சப்தம் மிகவும் போட்டிடும்
சக்க ரத்தால் ஓடிடும்
இரண்டு நல்ல நண்பர்கள் போல்
இருக்கும் தண்டவாளத்தில்
விரைந்து பாயும் ரயில் வண்டி
வேகமான ரயில் வண்டி
எந்த ஊருக் காயினும்
ஏறி நாமும் போகலாம்
சொந்த ஊரை மீண்டுமே
சுகமாய் வந்து சேரலாம்.



பாட்டு:






## காய்கறிகள்

குட்டை குட்டை கத்திரிக்காய்
குண்டு குண்டு சுண்டைக்காய்
நெட்டை நெட்டை முருங்கைக்காய்
நீண்டு தொங்கும் புடலங்காய்
சட்டிப் பானை போலவே
தடித்திருக்கும் பறங்கிக்காய்
பட்டை போட்ட வெண்டைக்காய்
பச்சை நிற பாவற்காய்
சொட்டையில்லா சுரக்காய்
சொக்கும் நல்லதக்காளி
கொடியில் தொங்கும் அவரைக்காய்
கொவ்வை நிறமிளகாய்
வாட்டசாட்ட வாழைக்காய்
வந்துபார் என் தோட்டத்தில்









பாட்டு:



## பூனையக்கா

பூனையக்கா! பூனையக்கா!
எங்கே போனீங்க?
லண்டனுக்கு ராணியை நான்
பார்க்கப் போனேங்க
அங்கே போய் பூனையக்கா
என்ன செஞ்சீங்க?
குட்டி எலி ஒன்றைப் பார்த்து
ஓட்டி விட்டேங்க.

## பாட்டு:





### காகமும், நரியும்

பாம்பு அம்மா கடையிலே!
பருப்பு வடையும் சுடையிலே!
காகம் வந்தது இடையிலே!
கவ்விச் சென்றது வாயிலே!

நரி அண்ணன் வந்தாரு!
நயமாகப் பேசினாரு!
வடையைத் தின்ன நினைத்தாரு!
பாட்டுப் பாடச் சொன்னாரு!

காக்கா பாட்டுப் பாடையிலே!
வடையும் கீழே விழுந்தது!
காத்திருந்த நரி அண்ணன்!
வடையைக் கவ்விச் சென்றாரு!

**நீதி : ஏமாற்றிய காகம் ஏமாந்து போனது. மோசக்காரன் பேச்சை நம்பி மோசம் போகாதே.**



## நரியும் கொக்கும்:

**படம் பார்த்துக் கதை சொல்லுக :**



## நாயும் எலும்பும்

ஒரு சமயம் ரிச்சி என்ற நாய், கசாப்புக் கடை அருகில் ஒரு எலும்புத் துண்டைப் பார்த்தது. ஆவலுடன் அதைத் தன் வாயால் கவ்வியது. எலும்புத்துண்டைச் சாப்பிடும் எண்ணத்துடன் தன் இருப்பிடம் நோக்கி ஓடியது. அது சமயம் ஒரு ஆற்று பாலத்தை கடக்க நேரிட்டது. பாலத்தின் கீழே தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. பாலத்தில் இருந்து பார்த்த போது அதனுடைய பிம்பம் தண்ணீரில் தெரிந்தது. அதைப் பார்த்து தன்னைப் போலவே இன்னொரு நாயும் எலும்புத்துண்டு வைத்திருப்பதாக தவறாக எண்ணியது.

பேராசை கொண்ட ரிச்சி தண்ணீரில் தெரிந்த அந்த நாயிடம் உள்ள எலும்புத்துண்டையும் தானே பெற வேண்டும் என்று ஆசைப்பட்டது. அதனால் தன் பிம்பத்தை பார்த்து போவ் - வெவ் - வெவ் என்று குரைத்தது. ரிச்சியின் வாயில் இருந்த எலும்புத்துண்டு வாயைத் திறந்து குரைத்ததால் ஓடும் தண்ணீரில் விழுந்து மறைந்தது. எலும்புத்துண்டை தவறவிட்ட ரிச்சி ஏமாற்றத்துடன் சென்றது.

நீதி : பேராசை பெருநஷ்டம்






TERM 3



## உயிர் மெய்யெழுத்துக்கள்:

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துக்களின் ஒலியை அறிக:

# க



கண்



கப்பல்



கழுதை

# ங



நுங்கு



பொங்கல்



சிங்கம்

## உயிர் மெய்யெழுத்துக்கள்:

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துக்களின் ஒலியை அறிக:

# ச



சக்கரம்



தச்சர்



மொச்சை

# ஞ



மஞ்சள்



ஊஞ்சல்



இஞ்சி

## உயிர் மெய்யெழுத்துக்கள்:

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துக்களின் ஒலியை அறிக:

# ட



பட்டம்



ஓடம்



வட்டம்

# ண




பணம்



கிணறு



கிண்ணம்

## உயிர் மெய்யெழுத்துக்கள்:

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துக்களின் ஒலியை அறிக:

# த



தந்தம்



மத்தளம்



தவளை

# ந



நகம்



நரி



நத்தை

## உயிர் மெய்யெழுத்துக்கள்:

**படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துக்களின் ஒலியை அறிக:**

# ப



பலாப்பழம்



பம்பரம்



பந்து

# ம



மான்



மா மரம்



மயில்

## உயிர் மெய்யெழுத்துக்கள்:

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துக்களின் ஒலியை அறிக:

# ய



யாழ்



முயல்



வயல்

# ர



மரம்



அரசன்



ரம்பம்

## உயிர் மெய்யெழுத்துக்கள்:

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துக்களின் ஒலியை அறிக:

# ல



ஆலமரம்



பாலம்



லட்டு

# வ



வௌவால்



சேவல்



செவ்வாழை

## உயிர் மெய்யெழுத்துக்கள்:

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துக்களின் ஒலியை அறிக:

# ழ



உழவர்



குழந்தை



வாழைப்பழம்

# ள



கம்பளம்



விளக்கு



காளான்

## உயிர் மெய்யெழுத்துக்கள்:

படத்தின் பெயரைச் சொல்லி எழுத்துக்களின் ஒலியை அறிக:

# ற



ஏற்றம்



புறா



இறகு

# ன



விமானம்



பேனா



அன்னம்

## சொல்லிச் சொல்லி எழுதுக:



### க முதல் ந வரை எழுதுக:

க ங ச ஞ

ட ண த ந

## சொல்லிச் சொல்லி எழுதுக:

### ப முதல் ன வரை எழுதுக:

ப ம ய ர ல

வ ழ ள ற ன

## தமிழ்

### படம் பார்த்துப் பெயர் சொல்லு:

| | | |
|---|---|---|
|  க |  ங |  ச |
|  ஞ |  ட |  ண |
|  த |  ந |  ப |
|  ம |  ய |  ர |
|  ல |  வ |  ழ |
|  ள |  ற |  ன |

# தமிழ்

## உயிர் மெய்யெழுத்துக்கள்:



| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ |
| த் | த | தா | தி | தீ | து | தூ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ |

## உயிர் மெய்யெழுத்துக்கள்:

| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|
| கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| பெ | பே | பை | பொ | போ | பௌ |
| மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| னெ | னே | னை | னொ | னோ | னௌ |

## அண்ணல் காந்தி:



| | |
|---|---|
| அ | அண்ணல் காந்தி அவரைப் போல் |
| ஆ | ஆற்றல் நிறைந்தவர் யாருமிலை! |
| இ | இந்திய நாட்டின் விடுதலையை |
| ஈ | ஈட்டித் தந்தவர் அவரன்றோ? |
| உ | உண்மை அவரின் உயிர் மூச்சு! |
| ஊ | ஊரை உயர்த்த அவர் பேச்சு! |
| எ | எண்ணம் முழுதும் ஒளி வீச்சு! |
| ஏ | ஏற்றம் கொணர எதிர் நீச்சு! |
| ஐ | ஐயன் என்ன நமக்குரைத்தார்? |
| ஒ | ஒற்றுமையாக வாழ்ந்திருங்கள் |
| ஓ | ஓங்கிய அன்பு சூழ்ந்திருங்கள்! |
| ஔ | ஔவியம் இன்றி இனிதிருங்கள்! |
| ஃ | அஃதை மறவா திருந்திடுவோம்! |

- கவிக்குயில் திருவாட்டி சௌந்திரா கைலாசம்.

## வெள்ளைப்புறா:



வானில் பறக்குது வெள்ளைப் புறா - நம்மை
வட்டமும் போடுது வெள்ளைப் புறா,
காணச் சிறியது வெள்ளைப் புறா - பெரும்
காரியம் செய்திடும் வெள்ளைப் புறா.
ஆவ் என்று கத்துது வெள்ளைப் புறா - குஞ்சை
அள்ளி அணைக்குது வெள்ளைப் புறா.
நீ வந்து பார் தம்பி வெள்ளைப் புறா - வான
நிலவு போல் தோணுது வெள்ளைப் புறா.
அன்பிற்குத் தூதாகும் வெள்ளைப் புறா - நல்ல
அமைதிக்கு அடையாளம் வெள்ளைப் புறா
இன்பத்தைத் தந்திடும் வெள்ளைப் புறா - பாரில்
எவரும் விரும்பிடும் வெள்ளைப் புறா.

- கவிக்குயில் திருவாட்டி சௌந்திரா கைலாசம்.

## இசைக்கருவிகள்:



தபேலா



மிருதங்கம்



வீணை



புல்லாங்குழல்



ஹார்மோனியம்



நாதஸ்வரம்



வயலின்



யாழ்

## தமிழ்

### உயிர் மெய்யெழுத்துக்கள்:



கரடி

அ, ஆ, ஓசை மொழிகள்



காகம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் + அ | க | கடல் | க் + ஆ | கா | காகம் |
| ங் + அ | ங | எங்ஙனம் | ங் + ஆ | ஙா | |
| ச் + அ | ச | சரம் | ச் + ஆ | சா | சாணம் |
| ஞ் + அ | ஞ | ஞமலி | ஞ் + ஆ | ஞா | ஞாயிறு |
| ட் + அ | ட | படகு | ட் + ஆ | டா | வளைகுடா |
| ண் + அ | ண | மணல் | ண் + ஆ | ணா | குணாளன் |
| த் + அ | த | தங்கம் | த் + ஆ | தா | தாழ்ப்பாள் |
| ந் + அ | ந | நகம் | ந் + ஆ | நா | நாகம் |
| ப் + அ | ப | பவளம் | ப் + ஆ | பா | பாலம் |
| ம் + அ | ம | மருந்து | ம் + ஆ | மா | மாம்பழம் |
| ய் + அ | ய | தாயகம் | ய் + ஆ | யா | யார் |
| ர் + அ | ர | அரசன் | ர் + ஆ | ரா | இராப்பகல் |
| ல் + அ | ல | திலகம் | ல் + ஆ | லா | நிலா |
| வ் + அ | வ | வயல் | வ் + ஆ | வா | வானவில் |
| ழ் + அ | ழ | பழம் | ழ் + ஆ | ழா | விழா |
| ள் + அ | ள | வளநாடு | ள் + ஆ | ளா | களாப்பழம் |
| ற் + அ | ற | மறதி | ற் + ஆ | றா | புறா |
| ன் + அ | ன | மனம் | ன் + ஆ | னா | கனா |

கடல் மணல்
நல்ல பவளம்
தங்கப் பதக்கம்
வளநாடு

பாய்மரம்
தாழம்பூ
நாய் வால்
பாலர் பாடம்

தமிழ்

## உயிர் மெய்யெழுத்துக்கள்:




இ, ஈ, ஓசை மொழிகள்




| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் + இ | கி | கிளி | க் + ஈ | கீ | கீரை |
| ங் + இ | ஙி | | ங் + ஈ | ஙீ | |
| ச் + இ | சி | சிமிழ் | ச் + ஈ | சீ | சீதை |
| ஞ் + இ | ஞி | ஞிமிலி | ஞ் + ஈ | ஞீ | |
| ட் + இ | டி | படி | ட் + ஈ | டீ | டீ |
| ண் + இ | ணி | மணி | ண் + ஈ | ணீ | தண்ணீர் |
| த் + இ | தி | திப்பிலி | த் + ஈ | தீ | தீபம் |
| ந் + இ | நி | நிலா | ந் + ஈ | நீ | நீளம் |
| ப் + இ | பி | பின்னர் | ப் + ஈ | பீ | பீப்பாய் |
| ம் + இ | மி | மின்மினி | ம் + ஈ | மீ | மீன் |
| ய் + இ | யி | தயிர் | ய் + ஈ | யீ | வாயீரம் |
| ர் + இ | ரி | நரி | ர் + ஈ | ரீ | பாரீர் |
| ல் + இ | லி | வலிமை | ல் + ஈ | லீ | சலீம் |
| வ் + இ | வி | விசிறி | வ் + ஈ | வீ | வீதி |
| ழ் + இ | ழி | கோழி | ழ் + ஈ | ழீ | வாழீர் |
| ள் + இ | ளி | மழைத்துளி | ள் + ஈ | ளீ | கேளீர் |
| ற் + இ | றி | விசிறி | ற் + ஈ | றீ | கூறீர் |
| ன் + இ | னி | இனிப்பு | ன் + ஈ | னீ | பன்னீர் |

மணி அடி
தமிழ் படி
தயிர் பானை
மயில் விசிறி

நீதிபதி
நீல நிறம்
கடல் மீன்
தண்ணீர் தாரீர்

# தமிழ்

## உயிர் மெய்யெழுத்துக்கள்:



உ, ஊ, ஓசை மொழிகள்

குருவி



கூடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் + உ | கு | குருவி | க் + ஊ | கூ | கூடு |
| ங் + உ | ஙு | | ங் + ஊ | ஙூ | |
| ச் + உ | சு | சுக்கு | ச் + ஊ | சூ | சூலம் |
| ஞ் + உ | ஞு | | ஞ் + ஊ | ஞூ | |
| ட் + உ | டு | ஏடெடு | ட் + ஊ | டூ | தகடூர் |
| ண் + உ | ணு | அணுக்கம் | ண் + ஊ | ணூ | பூணூல் |
| த் + உ | து | துண்டு | த் + ஊ | தூ | தூக்கம் |
| ந் + உ | நு | நுங்கு | ந் + ஊ | நூ | நூறு |
| ப் + உ | பு | புட்டு | ப் + ஊ | பூ | பூமி |
| ம் + உ | மு | முதுகு | ம் + ஊ | மூ | மூடன் |
| ய் + உ | யு | ஆயுள் | ய் + ஊ | யூ | யூகம் |
| ர் + உ | ரு | கரும்பு | ர் + ஊ | ரூ | ரூபாய் |
| ல் + உ | லு | சிலுவை | ல் + ஊ | லூ | பலூன் |
| வ் + உ | வு | கடவுள் | வ் + ஊ | வூ | தஞ்சாவூர் |
| ழ் + உ | ழு | முழுமை | ழ் + ஊ | ழூ | பழூர் |
| ள் + உ | ளு | உளுந்து | ள் + ஊ | ளூ | உள்ளூர் |
| ற் + உ | று | பொறுமை | ற் + ஊ | றூ | சிற்றூர் |
| ன் + உ | னு | பனுவல் | ன் + ஊ | னூ | நன்னூர் |

பசு மாடு
துதி செய்
சிட்டுக் குருவி
கடவுள் கருணை

நூல் கடை
குருவிக் கூடு
தூண்டில் மீன்
ஊசிநூல்

## உயிர் மெய்யெழுத்துக்கள்:





### எ, ஏ ஓசை மொழிகள்



எலி

சேவல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் + எ | கெ | கெடுதி | க் + ஏ | கே | கேழ்வரகு |
| ங் + எ | ஙெ | | ங் + ஏ | ஙே | |
| ச் + எ | செ | செடி | ச் + ஏ | சே | சேவல் |
| ஞ் + எ | ஞெ | ஞெலி | ஞ் + ஏ | ஞே | ஞேயா |
| ட் + எ | டெ | ஏடெடு | ட் + ஏ | டே | கண்டேன் |
| ண் + எ | ணெ | வெண்ணெய் | ண் + ஏ | ணே | கண்ணே |
| த் + எ | தெ | தெரு | த் + ஏ | தே | தேள் |
| ந் + எ | நெ | நெருப்பு | ந் + ஏ | நே | நேர் |
| ப் + எ | பெ | பெயர் | ப் + ஏ | பே | பேச்சு |
| ம் + எ | மெ | மெய் | ம் + ஏ | மே | மேடை |
| ய் + எ | யெ | நோயென்ன | ய் + ஏ | யே | செய்யேல் |
| ர் + எ | ரெ | ஈரெட்டு | ர் + ஏ | ரே | நரேந்திரன் |
| ல் + எ | லெ | கல்லெறி | ல் + ஏ | லே | சொல்லேன் |
| வ் + எ | வெ | வெளிச்சம் | வ் + ஏ | வே | வேம்பு |
| ழ் + எ | ழெ | | ழ் + ஏ | ழே | தாழேன் |
| ள் + எ | ளெ | முள்ளெடு | ள் + ஏ | ளே | உள்ளே |
| ற் + எ | றெ | நூறெண்ணும் | ற் + ஏ | றே | பெறேன் |
| ன் + எ | னெ | என்னென்ன. | ன் + ஏ | னே | முன்னே |

பசு நெய்
நெல் வயல்
பாக்கு வெட்டி
பூச் செண்டு

ஆணிவேர்
கேணி நீர்
தேன் கூடு
மேடைப் பேச்சு

## உயிர் மெய்யெழுத்துக்கள்:



யானை

### ஐ, ஒ ஓசை மொழிகள்



கொக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் + ஐ | கை | மங்கை | க் + ஒ | கொ | கொசு |
| ங் + ஐ | ஙை | | ங் + ஒ | ஙொ | |
| ச் + ஐ | சை | பச்சை | ச் + ஒ | சொ | சொம்பு |
| ஞ் + ஐ | ஞை | அநுஞை | ஞ் + ஒ | ஞொ | ஞொள்ளல் |
| ட் + ஐ | டை | ஆடை | ட் + ஒ | டொ | ஒண்டொடி |
| ண் + ஐ | ணை | வீணை | ண் + ஒ | ணொ | கண்ணொளி |
| த் + ஐ | தை | ஆந்தை | த் + ஒ | தொ | தொட்டி |
| ந் + ஐ | நை | பொருநை | ந் + ஒ | நொ | நொடி |
| ப் + ஐ | பை | பை | ப் + ஒ | பொ | பொட்டு |
| ம் + ஐ | மை | ஆமை | ம் + ஒ | மொ | மொழி |
| ய் + ஐ | யை | மாயை | ய் + ஒ | யொ | வாயொழி |
| ர் + ஐ | ரை | குதிரை | ர் + ஒ | ரொ | ரொக்கம் |
| ல் + ஐ | லை | மலை | ல் + ஒ | லொ | வேலொன்று |
| வ் + ஐ | வை | வைகை | வ் + ஒ | வொ | ஒவ்வொரு |
| ழ் + ஐ | ழை | வாழை | ழ் + ஒ | ழொ | ஏழொன்பது |
| ள் + ஐ | ளை | வளை | ள் + ஒ | ளொ | ஆளொருவன் |
| ற் + ஐ | றை | பாறை | ற் + ஒ | றொ | மற்றொருத்தி |
| ன் + ஐ | னை | பூனை | ன் + ஒ | னொ | வானொலி |

வைகை நதி
எலி வளை
காலை வேளை
மதுரை நகர்

மான் கொம்பு
தொட்டி நீர்
தமிழ் மொழி
பொன் காப்பு

## உயிர் மெய்யெழுத்துக்கள்:

ஓ, ஔ ஓசை மொழிகள்



கோபுரம்



வௌவால்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் + ஓ | கோ | கோட்டை | க் + ஔ | கௌ | கௌளி |
| ங் + ஓ | ஙோ | | ங் + ஔ | ஙௌ | |
| ச் + ஓ | சோ | சோறு | ச் + ஔ | சௌ | சௌபாக்கியம் |
| ஞ் + ஓ | ஞோ | | ஞ் + ஔ | ஞௌ | |
| ட் + ஓ | டோ | மண்டோதரி | ட் + ஔ | டௌ | டௌளத் |
| ண் + ஓ | ணோ | விண்ணோர் | ண் + ஔ | ணௌ | |
| த் + ஓ | தோ | தோட்டம் | த் + ஔ | தௌ | தௌவை |
| ந் + ஓ | நோ | நோய் | ந் + ஔ | நௌ | நௌவி |
| ப் + ஓ | போ | போர் | ப் + ஔ | பௌ | பௌர்ணமி |
| ம் + ஓ | மோ | மோப்பம் | ம் + ஔ | மௌ | மௌனம் |
| ய் + ஓ | யோ | அயோத்தி | ய் + ஔ | யௌ | யௌவனம் |
| ர் + ஓ | ரோ | தேரோட்டம் | ர் + ஔ | ரௌ | திரௌபதி |
| ல் + ஓ | லோ | ஆலோலம் | ல் + ஔ | லௌ | லௌகீகம் |
| வ் + ஓ | வோ | நாவோசை | வ் + ஔ | வௌ | வௌவால் |
| ழ் + ஓ | ழோ | கீழோர் | ழ் + ஔ | ழௌ | |
| ள் + ஓ | ளோ | வெள்ளோட்டம் | ள் + ஔ | ளௌ | |
| ற் + ஓ | றோ | ஆற்றோரம் | ற் + ஔ | றௌ | |
| ன் + ஓ | னோ | மனோன்மணி | ன் + ஔ | னௌ | |

பனை ஓலை
வான் கோழி
மயில் தோகை
சோளப் பயிர்

கௌதம புத்தர்
இன்று பௌர்ணமி
நௌவி என்பது மான்
ஓமம் நல்ல மருந்து

## திசைகள்:




சூரியன் காலையில் உதிக்கிறது.
அது உதிக்கும் திசை கிழக்கு.
சூரியன் மாலையில் மறைகிறது.
அது மறையும் திசை மேற்கு.
காலையில் சூரியனை பார்த்து நில்!
வலக்கைப் பக்கம் இருப்பது தெற்கு.
இடக்கைப் பக்கம் இருப்பது வடக்கு.

**விடுபட்ட எழுத்தை எழுதுக:**

1) கி ....... க் கு        2) மே ....... கு

3) வ ....... க் கு        4) தெற் .......

# தமிழ்

## விலங்குகளின் இருப்பிடம்:



குகை



இலாயம்



தொழுவம்



பட்டி



தேன்கூடு



குருவிகூடு



எலி வளை



பட்டி

## பயன்படும் விலங்குகள்:

படத்தைப் பார்த்து தொடரைப் படி:



பால் தரும்.



முட்டை இடும்.



வீட்டைக் காக்கும்.



வண்டி இழுக்கும்.



ஏர் உழும்.



பொதி சுமக்கும்.



## ஒளி தருபவை:



சூரியன்



சந்திரன்



மெழுகுவர்த்தி



விண்மீன்



மின் விளக்கு



அகல்விளக்கு

### வழிபாடு

எல்லாம் வல்ல இறைவனே!
எம்மை காக்கும் ஆண்டவனே!
நலமாய் தமிழைத் தந்திடுவாய்!
அன்பும், அறிவும் கல்வியும்!
நிறைவாய் எமக்குத் தந்திடுவாய்!
மாதா பிதா குருவையும்!
நலமாய் காத்திட வேண்டுகிறோம்!
வீடும் நாடும் செழித்திடவே
நித்தம் உன் அருள் தந்திடுவாய்!



## வடமொழி எழுத்துக்கள்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜ | ஜா | ஜி | ஜீ | ஜூ | ஜெ | ஜே | ஜை | ஜொ | ஜோ | ஜௌ | ஜ் |
| ஷ | ஷா | ஷி | ஷீ | ஷூ | ஷெ | ஷே | ஷை | ஷொ | ஷோ | ஷௌ | ஷ் |
| ஸ | ஸா | ஸி | ஸீ | ஸூ | ஸெ | ஸே | ஸை | ஸொ | ஸோ | ஸௌ | ஸ் |
| ஹ | ஹா | ஹி | ஹீ | ஹூ | ஹெ | ஹே | ஹை | ஹொ | ஹோ | ஹௌ | ஹ் |
| க்ஷ | க்ஷா | க்ஷி | க்ஷீ | க்ஷூ | க்ஷெ | க்ஷே | க்ஷை | க்ஷொ | க்ஷோ | க்ஷௌ | க்ஷ் |



புஷ்பம்



திராக்ஷை



ஹாரம்

## வடமொழி எழுத்துக்கள்:

ரோஜா புஷ்பம் அழகானது.

பட்டு வஸ்திரம் விலை அதிகம்.

இந்த வருஷம் நல்ல மழை.

திராக்ஷைப் பழம் சுவையானது.

காந்தி ஒரு மஹாத்மா.

மயில் இந்தியாவின் தேசியப் பக்ஷி

ஸ்ரீ ரங்கநாதர் கோயில் பிரஸித்தி பெற்றது.

ஸ    ஸி    ஷ    க்ஷ    ஜ    ஹ    ஸ்ரீ

# தமிழ்

## நாட்கள் கிழமைகள்:

### கிழமைகள்:

ஞாயிற்றுக்கிழமை

திங்கட்கிழமை

செவ்வாய்க்கிழமை

புதன்கிழமை

வியாழக்கிழமை

வெள்ளிக்கிழமை

சனிக்கிழமை.




### தமிழ் மாதங்கள்:

சித்திரை

வைகாசி

ஆனி

ஆடி

ஆவணி

புரட்டாசி

ஐப்பசி

கார்த்திகை

மார்கழி

தை

மாசி

பங்குனி

### ஆங்கில மாதங்கள்:

ஜனவரி

பிப்ரவரி

மார்ச்

ஏப்ரல்

மே

ஜன்

ஜூலை

ஆகஸ்ட்

செப்டம்பர்

அக்டோபர்

நவம்பர்

டிசம்பர்

2023 Jessi Publications JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

## வாகனங்கள்:



குதிரைவண்டி



மிதிவண்டி



தானி



மகிழுந்து



சுமையுந்தி



பேருந்து



தொடர்வண்டி



வானூர்தி

# தமிழ்

## கருவிகள்:



கத்தி



சுத்தி



அரம்



கத்திரிக்கோல்



ரம்பம்



கோடரி



திருப்புளி



கொரடு



திருகி



மண்வாரி

## பாட்டு:



### பட்டாம் பூச்சி

பட்டுப் பட்டாம் பூச்சி, பட்டுக் கட்டிப் போச்சு!
வட்ட மிட்டுப் பூவை, வந்து தொட்டுப் போச்சு!
எட்டிப் பிடிக்கச் சென்றேன், என்னை தப்பிப் போச்சே!
எட்ட, எட்ட மேலே, எங்கோ பறந்து போச்சே!



### காக்கா

காக்கா காக்கா கருப்பண்ணா!
காலையில் எழுந்தென்னை எழுப்பண்ணா!
கையிலுள்ள பண்டத்தை
காணாமல் கொண்டோடாதே!
ஆகாயத் தோட்டி! உன்னை
ஆண்டவனும் காப்பானே.

பாட்டு:



## கொக்கரக்கோ சேவலே

கொக்கரக்கோ; சேவலே!
கொண்டையாட்டும் சேவலே!
நித்தம் எம்மைக் காலையில் ;
நேரத்திலே எழுப்புவாய்.
தூங்குகின்ற உலகையே ;
குரல் கொடுத்து எழுப்பிடும் ;
கொக்கரக்கோ ; சேவலே!
வாழ்க உந்தன் சேவையே!

## பாட்டு:



### குருவியக்கா குருவியக்கா எங்கே போறீங்க?

குருவியக்கா குருவியக்கா எங்கே போறீங்க? - நான்
கூடுகட்டக் குச்சிகளைப் பொறுக்கப் போறேங்க!
குச்சிகளைப் பொறுக்கிவந்து என்ன செய்வீங்க? - நான்
மச்சுமேலே குச்சுவீடு கட்டி வாழ்வேங்க!
குச்சுவீட்டில் குளிரச்சா என்ன செய்வீங்க? - நான்
கும்பகோணம் போர்வை வாங்கி போர்த்திக் கொள்வேங்க!
கோடை கால வெய்யிலுக்கு எங்கே போவீங்க? - நான்
கொடைக்கானல் பங்களாவுக்கு பறந்து போவேங்க!
கொடைக்கானல் போய்ச் சேர என்ன செய்வீங்க? - நான்
அடிவாரம் பேருந்தில் ஏறிப்போவேங்க!

பாட்டு:

## மல்லிகை

குண்டு குண்டு மல்லிகை
கண்டு கண்டு வண்டுதான்
மொண்டு மொண்டு தேனையே
உண்டு உண்டு பாடுதே
பொட்டு பொட்டு மல்லிகை
மொட்டு மொட்டு விரியத்தான்
பட்டுப் பட்டுப் பனியுமே
தொட்டுத் தொட்டுக் கூடுதே
முத்து முத்து மல்லிகை
கொத்து கொத்துக் கண்டுதான்
நித்தம் நித்தம் தென்றலும்
வித்தை வித்தை ஆடுதே.





## வாழைமரம்

வாழைமரம்! வாழைமரம்!
வழவழப்பாய் இருக்கும் மரம்.
சீப்புச் சீப்பாய் வாழைப்பழம்
தின்னத் தின்னக் கொடுக்கும் மரம்.
பந்தி வைக்க இலைகளெல்லாம்
தந்திடுமாம்! அந்த மரம்
காயும் பூவும் தண்டுகளும்
கறி சமைக்க உதவும் மரம்
கல்யாண வாசலிலே
கட்டாயம் நிற்கும் மரம்.

## பாட்டு:



### உண்மை பேசு

நாவின் நயமே நாநயம்.
நாணயம் தருவதும் நாநயம்!
நன்மை தீமை யாவும்;
நாவால் வருவது ஆகும்!
வாய்மை காக்கப் பேசு;
பொய்மை பேசக் கூசு;
உண்மை பேசப் பழகு;
உள்ளம் பெறும் அழகு!

## குரங்கும் குப்பனும்:





## குரங்கும் குப்பனும்

குப்பன், குல்லாய் வியாபாரி, குல்லாய் விற்கச் சென்றானே, மத்தியான வேளையில், மரத்தடியில் உறங்கினான்.

குரங்குக் கூட்டம் வந்ததாம்! குல்லாய்களைக் கண்டதாம்!

தாவித் தாவித் குதித்ததாம்! தலையில் வைத்துக் கொண்டதாம்! விழித்துப் பார்த்த குப்பனும், வேதனையால் துடித்தானாம்! ஐயோ! போச்சே! என்குல்லாய், என்றே அவனும் அழுதானாம். குரங்கே! நீயும் தந்துவிடு - என கொஞ்சிப் கொஞ்சிப் பார்த்தானாம்.

ஆனால் அவைகள் தந்தனவா? அரண்டு போனாள் வியாபாரி! தந்திரத்தால் குல்லாயைத் தான் பெறவே நினைத்தானாம். தலையிலுள்ள குல்லாயைத் தரைமேல் வீசி எறிந்தானாம். அவனைப்போலே குரங்குகளும், அப்படியே செய்தனவாம்.

ஆஹா! வெற்றி! என்றானாம். அனைத்தையும் பொறுக்கிக்கொண்டானாம், இனிமேல் வேலை நேரத்தில் இனி நான் உறங்க மாட்டேனே - என்றே அவனும் குல்லாயெல்லாம் எடுத்துக்கொண்டு, கூவி விற்கச் சென்றானாம்!

# தமிழ்

## அறிவுள்ள காகம்:



கோடையில் ஒரு நாள் தாகம் கொண்ட காகம் தண்ணீருக்கு அலைந்தது. கானகம் முழுதும் தேடியது. ஒரு தண்ணீர் பானையை கண்டது, மகிழ்ச்சி கொண்டது. பானையை நெருங்கி தண்ணீர் குடிக்க முயன்றது. ஆனால் அதற்கு தண்ணீர் கிடைத்ததா? பானையில் இருந்த தண்ணீர் காக்காவுக்கு எவ்வளவு முயன்றும் எட்டவில்லை. மனம் தளராத அறிவுள்ள காகம் அருகில் கிடந்த கற்களை பொறுக்கிப் பொறுக்கி தண்ணீர் பானையில் போட்டது. தண்ணீர் மேலே வந்தது. தாகம் தீர தண்ணீர் குடித்த காகம் மகிழ்ச்சியுடன் பறந்து சென்றது.



**நீதி : வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.**



## பசி கொண்ட நரி:



பெரிய தோட்டம் ஒன்றிலே, சிறிய நரியும் சென்றது! நரிக்குப்பசியும் வந்தது. நான்கு திசையும் திரிந்தது. உயரமான கொடியிலே! உயர்ந்த திராட்சைக் குலையினை, நரியும் கண்டு மகிழ்ந்தது, நாக்கில் நீரும் சுரந்தது! பறிக்க எண்ணம் கொண்டது, பயன்படாமல் போனது! தாவித் தாவிக் குதித்தது! தவிச்சுப்போயி நின்றது! முயன்று முயன்று பார்த்தது! முயற்சி வீணாய்ப் போனது! வேறு வழியும் தெரியாமல், வெறுத்தே நரியும் சொன்னது! சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும். தின்றால் பல்லெல்லாம் கூசும். என்றே நரியும் ஏசியது, ஏக்கமாகச் சென்றது!

**நீதி : கிட்டாதாயின் வெட்டென மற.**

